மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) நீர்த் தேக்கங்களில் போதுமான நீர் இல்லாமையால் மனுதாரரின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, 1971-72, 1972-73-ஆம் வருஷங்களில் இக் கால்வாய் மூலம் மொத்தம் எத்தனை ஏக்கர்கள் சாகுபடி செய்யப்பட்டன ? அதற்கு எந்த அடிப்படையில் தீர்வை வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தீர்வை எந்த அளவிற்கு வசூலிக்கப்படுகிறது என்பதைப் பற்றித் தகவல் இல்லை. இது, தண்ணீர் விடுவதற்கு அனுமதி கேட்டிருந்தார்களா என்ற கேள்வி. அதற்கு மட்டும் தகவல் இருக்கிறது. வேறு விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

வேடந்தாங்கல் ஏரியை மேம்படுத்தல்.

*வினு 281 : திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

மதுராந்தகம் வட்டம், வேடந்தாங்கலில் உள்ள மரங்கள் பட்டுப் போவதைத் தடுக்கும் வகையில் அங்குள்ள ஏரியை மாற்றி அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். வேடந்தாங்கல் ஏரியி லுள்ள மரங்கள் பட்டுப்போகாமல் இருக்க பல பள்ளங்கள் வெட்டும் திட்டம் ஒன்று ரூ. 29,500-க்கு தல அதிகாரிகளால் ஒப்புதல் அளிக்கப் பட்டிருக்கிறது.

Boeing Air-Service to Madurai.

*282 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the State Government have been consulted by the Union Government on the opening of Boeing Air Service to Madurai ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the steps taken to get this introduced at an early date ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ), (இ), & (உ) இந்தியன் ஏர் லைன்ஸ் நிறுவனத்தார் மேற்கொண்டு ஒரு போயிங் விமானத்தை வாங்கி 1974-ம் ஆண்டு கடைசியிலோ அல்லது 1975-ம் ஆண்டின் ஆரம்பத்திலோ ஒரு போயிங் 737 விமானத்தை மதுரைக்கு விட உத்தேசித்திருப்பதாக இந்திய அரசு இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அதற்கான "லேண்ட் அக்விசிஷன்" முடிந்துவிட்டதா ? எவ்வளவு அதிக நிலம் தேவைப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றுவதற்கான முன்னுரிமைப் பட்டியலில் மதுரை விமான நிலையம் இருப்பதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த நிபுணர்கள் மதுரைக்கு வந்த சமயத்தில் அது ஒரு முக்கியமான விமான நிலையமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் சொன்ன மாதிரி மதுரை விமான நிலையத்தில் இன்னும் ஒரு மாதத்தில் வந்து இறங்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் கூறிய பதிலில் 1974-ம் ஆண்டு கடைசியிலோ அல்லது 1975-ஆம் ஆண்டின் ஆரம்பத்திலோ வரும் என்று இந்திய அரசு இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது என்று தெரிவித்திருக்கிறேன்.

Handloom Export Corporation.

*283 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal to set up a Handloom Export Corporation in the State to facilitate the export of handloom clothes to other States and countries ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு செ மாதவன்

(அ) ஆம்.

(இ) விவரங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : சார், தனிப்பட்ட வியாபாரிகள் வெளிநாடுகளுக்குத் தரக் குறைவான துணிகளை அனுப்புவதால் வெளிநாடுகளில் நம்முடைய துணிகளுக்குக் கிராக்கி குறைந்திருக்கிறது. ஆகவே, சர்க்காரே பணம் ஒதுக்கி நல்ல தரமான துணிகளை, நல்ல டிசைன்களை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதே சமயத்தில் மெட்ராஸ் ஹேண்ட் கர்சிப் தென் ஆப்பிரிக்காவுக்குக் குறைவாக அனுப்பப்படுவதால் இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. அதையும் சேர்த்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?